★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No QB/8945/78

மலர்: 20 தை 12 ஸபர் 25 இதழ்: 346
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 25-1-79

# சரண்சிங், ஜெகஜீவன் துணைப் பிரதமர்கள்

## நிதி அமைச்சராகவும் சரண்சிங் பதவியேற்ருர்

## ரவிராய்க்கு சுகாதார அமைச்சு

புதுடில்லி, ஜன. 24 இந்திய முன்னுள் உள் துறை அமைச்சர் திரு. சரண் சிங் இந்திய துணைப் பிரதமரா கவும் நிதிஅமைச்சராகவும் பதவி ஏற்றுக்கொண்டார். கடந்த வருடம் ஜூன் மாதம் இந்திய மந்திரிசபையி லிருந்து வெளியேற்றப்பட்ட சரண்சிங் நீண்டகால சமரச முயற்சிக்குப்பின் மீண்டும் இன்று மந்திரி சபையில் சேர்ந்துகொண்டார்.

திரு. எஸ் எம். பட்டேல்

[6ம் பக்கம் பார்க்க]

### பொது வீதிகளில் குற்றம் புரிவோருக்கு

# அந்த இடத்திலேயே அபராதம் விதிக்க சட்டம்

## அமைச்சரவை ஆலோசனை; விரைவில் சபைக்கு வரலாம்

(கொழும்பு)

பொது வீதிகளில் போக்குவரத்துக் குற்றம் புரிகிறவர்களுக்கு அந்த இடத்திலேயே அபராதம் விதிப்பதற்கான சட்டமூலம் ஒன்று பற்றி அமைச்சரவை ஆலோசித்திருப்பதாகத் தெரிகிறது.

போக்குவரத்துச்சட்டமூலம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. இச்சட்டமூலம் பற்றி நேற்று அமைச்சரவை ஆராய்ந்தது.

இதன்படி சாலைகளை பாதசாரிகள் தடை செய்யப்பட்ட இடங்களில் கடந்து செல்வது வாகனங்களை நிறுத்தக்கூடாதென்ற இடங்களில் நிறுத்துவது போன்ற சிறு குற்றம் புரிகிறவர்களுக்கு அந்த இடத்திலேயே அபராதம் விதிப்பதற்கு வழி செய்யப்படும் என்று தெரிகின்றது.

இப்படியான குற்றம் புரிபவரைக் கண்டுபிடிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் அவரிடம் அபராதத் தொகைக்கான அறிவித்தல் 'ரசீற்'றைக் கொடுப்பார். இதனை சம்பந்தப்பட்டவர் ஒரு வாரத்துக்குள் தம் பிரதேசத்திலுள்ள கச்சேரியில் செலுத்த வேண்டும் அப்படி செலுத்தாத பட்சத்தில் அவர்மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தண்டனை நிறைவேற்றப்படும்.

புதிய சட்டத்தில் இப்படியான ஒரு ஏற்பாடு செய்யப்படலாம் என்று தெரிகிறது.

இதே சமயம் தனியார் பஸ் சேவைக்கான சட்டமூலம் பற்றியும் அமைச்சரவை ஆராய்ந்ததாகத் தெரிகிறது. (ம)

## கொழும்பில் வாழ்க்கைச்செலவு குறைவாம்!

[கொழும்பு]

உலகநாடுகளின் தலைநகர்களில் கொழும்பு நகரிலேயே வாழ்க்கைச்செலவு குறைவாக உள்ளது என்று ஐ. நா. புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கின்றது.

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவினதும் ஸயரின் தலைநகரான கின்ஸாஸாவினதும் வாழ்க்கைச்செலவே ஆகக்கூடியதாகும். இவ்விரு தலைநகரினதும் வாழ்க்கைச் செலவு 162 புள்ளி ஆகும். [இ[

## சிறுதீவில் குடியேற்றத் திட்டம் உருவாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு சமீபத்தில் உள்ள 'சிறுதீவில்' குடியேற்றத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கலாமா? என ஆராயப்படவிருக்கிறது.

சிறுதீவில் உள்ள நீர் பாவிப்புக்கு உகந்ததா? என நீரியல் ஆராய்ச்சி நடத்த பொறியியலாளர் குழு ஒன்று நாளை மறுதினம் சிறுதீவுக்கு செல்கிறது.

நீர் பாவிப்புக்கு உகந்தது எனக் காணப்பட்டால், அங்கு கடற்றொழிலாளருக்கான குடி

(6-ம் பக்கம் பார்க்க)

### தியாகம் செய்கிறோம் என்கிறார்கள்

## இடமாற்றம் என்றால் மட்டும் இவர்களுக்கு கசக்கிறது

[யாழ்ப்பாணம்[

தியாகம் செய்கின்றோம், இனத்திற்கு சேவை செய்கின்றோம் என்று மேடைகளில் முழங்குகின்ற பல ஆசிரியர்கள் கஷ்டப் பிரதேசங்களுக்கு மாற்றப்பட்டுவிட்டால், கல்வி அலுவலகத்திற்கு வந்து பல விதங்களில் தொல்லை கொடுக்

[6ம் பக்கம் பார்க்க]

### சுதந்திரதினம்:

## நடவடிக்கைபற்றி ஆராய இளைஞர்பேரவை கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

சுதந்திரதினமான பெப்ரவரி 4ம் தேதி என்ன நடவடிக்கைகள் எடுப்பதென்பது பற்றி ஆராய, தமிழ்இளைஞர் பேரவை மத்தியசெயற்குழு, இம்மாதம் 28ம் திகதி காலை யாழ்ப்பாணத்தில் கூடுகிறது.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள தமிழ்இளைஞர் பேரவை காரியாலயத்தில் இக் கூட்டம் நடைபெறும்.

பேரவை நிர்வாகச்செயலாளரான திரு. த. யோகநாதன் இக் கூட்டத்திற்கான அழைப்பை உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ளார்.

பல்கலைக்கழகப் பிரவேசத்தில் தரபபடுத்தல்தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது. [ஈ]

### தமிழ்நாடு

# வங்கிக்கொள்ளை வழக்கில் இலங்கையர் இருவரும் விடுதலை

காஞ்சிபுரம், ஜன 24

தமிழ்நாடு பெரியபாளையம் வங்கிக் கொள்ளை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட பருத்தித்துறையைச் சேர்ந்த வீரவாகு, ரவிவர்மா ஆகிய இருவரையும் குப்புசாமி என்பவரையும் காஞ்சிபுரம் செஷன்ஸ் நீதிபதி நாராயண் விடுதலை செய்தார்.

பெரியபாளையத்திலுள்ள 'பாங் ஆப் பரோடா' கிளையில் கடந்தவருடம் மார்ச் மாதம் 28ம் திகதி கொள்ளை முயற்சியில் ஈடுபட்டதாக மூன்று நபர்களும் கைது செய்யப்பட்டனர். வீரவாகு, ரவிவர்மா, குப்புசாமி ஆகிய மூவரும் மோட்டார் சைக்கிளில் வந்து கைத்துப்பாக்கியையும், கத்தியையும் காட்டி மிரட்டி கொள்ளைமுயற்சியில் ஈடுபட்டதாக வழக்குத் தொடரப்பட்டிருந்தது

வழக்கை விசாரணை செய்த நீதிபதி சாட்சியங்களை விசாரித்தபோது, கொள்ளைநோக்கத்துடனே, முன்னேற்பாட்டுடனே குற்றம்சாட்டப்பட்டவர்கள் நடந்துகொண்டதாக இல்லைஎனவும், சாட்சியங்கள் முரண்பட்டதாக உள்ளதாகவும் கூறி, மூவரையும் விடுதலைசெய்தார்.

இவ்வழக்கு விசாரணையில் 40 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. [புலோ, நி[

### தெஹ்ரான்

## விமானநிலையம் மூடப்பட்டது

தெஹ்ரான், ஜன 24

ஈரானிய மதத்தலைவர் வெள்ளியன்று நாடு திரும்புவார் என எதிர்பார்த்து தெஹ்ரான் விமானநிலையம் மூடபபட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்னரே இவ் விமானநிலையம் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலைநிறுத்தம் செய்துவரும் விமானச்சிப்பந்திகள் ஈரானிலிருந்து விமானம் ஒன்றை எடுத்துக்கொண்டு பாரிஸ் சென்று மதத்தலைவர் அயத்தொல்லா கொமேனியை அழைத்துவர ஏற்பாடுகள் செய்துவருவதை அடுத்தே விமானநிலையம் மூடபபட்டது.

இவர்கள் பாரிஸ் செல்ல விமானம் ஒன்றைக் கேட்டபோது பிரதமர் டாக்டர் பக்தியார் ஏற்கனவே மறுத்துவிட்டார். (இ)

வடமாகாணத்தில் புதிய லொறி; வர்த்தக வான் வாங்குபவர்களுக்கு கடன் வசதியளிக்கும் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம்

அத்துடன் உங்கள் மேலதிக பணத்திற்கு

அதிகவட்டி - நாணயம் - நம்பிக்கை - பாதுகாப்பு வழங்குகிறோம்.

| வட்டி | வருடம் | காலம் |
| --- | --- | --- |
| 24 வீதம் | 2 | கால முதிர்வில் |
| 20 வீதம் | 2 | மாதாந்தம் |
| 18 வீதம் | 1 | மாதாந்தம் |

குறைந்த பட்ச வைப்பு ரூபா 500/-

வர்த்தக விசாரணைகள்:-

மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிறுவனம்

தலைமை அலுவலகம்- 54, பாங்ஷால் வீதி கொழும்பு-11

124, கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம் தொலைபேசி- 418

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

தேவிபுரத்தில் பத்துப் பத்து ஏக்கராகவும், ஒருமித்தும் தென்னந் தோட்டம். 127 காய்க்கிற ஒட்டுமா, 40 கறுத்தக்கொழும்பான், 40 அம்பலவி, 47 மற்றும் எல்லா வகைகள்; பலா, தோடை, எலுமிச்சை, கஜு. ரோட்டுப் பக்கம் ரூபா 40,000; பின் பக்கம் ரூபா 25,000. பஸ் நிலையத்திலிருந்து ஒரு மைல். நிலத்தை மட்டமாக்கினால் 20 ஏக்கரும் மானாவாரியை நம்பி நெல் விதைக்கலாம். தி. கந்தசாமி, டச்ரோட், அளவெட்டி. 1425

இறைச்சிக்குரிய கோழிகள் விற்பனைக்குண்டு. அண்ணா பாம். இணுவில். 1421

புளியம் பொக்கணை குடியேற்றப்பகுதியில் பாடசாலைக்கு அருகாமையில் பத்து ஏக்கர் நெற்காணி விற்பனைக்குண்டு. எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1424, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1424

இங்கிலாந்தில் இருந்து இறக்குமதிசெய்யப்பட்ட Ford Cortina 1300L மிக நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. சனி ஞாயிற்றுக்கிழமைகளில் பார்வையிடலாம். ராஜகிரி, 183, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 1420

### தேவை

ஆகக் குறைந்தது ஐந்து வருட அனுபவமுள்ள ஆண் விற்பனையாளர்கள் தேவை. அனுபவமுள்ளவர்கள் மட்டும் உடன் நேரில் விண்ணப்பிக்கவும். க. நாகமுத்து அன் சன் 48/50 பெரியகடை, யாழ்ப்பாணம். 1407

ஊதுபத்தி கற்பூரம் செய்வதில் ஓரளவு தேர்ச்சி பெற்ற பெண்கள் வேலைக்குத்தேவை நேரில் வரவும். ஸ்ரீ அருணா இன்டஸ்றீஸ், 78/10 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 1426

100E மொடல் போர்ட் அங்கிலியா அல்லது போர்ட் பிறிவெக்ட் கார் தேவை தொடர்பு கொள்க. க. தயாபரராசா 210 ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். 1423

### கல்வி

GCE O/L டிசம்பர் 79 சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்னாள் கணித ஆசிரியை திருமதி G. நல்லையா கணித வகுப்புகள் நடத்துகிறார். செவ்வாய், வியாழன், சனி 4-30 கில்னர் அக்கடமி, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1410

### WANTED

Wanted Lady Steno Typist preferably with knowledge of Accounts. Immediate engagement. Trident Marine Export Ltd., 28, Moor Road, Wellawatte, Colombo-6. 1419

### 10-வது ஆண்டு நினைவாஞ்சலி



வட்டுக்கோட்டை
உயர்திரு முதலியார்
ப. மு. சங்கரப்பிள்ளை
(சமாதான நீதவான்)
தோற்றம்: 6-11-1906
மறைவு: 25-1-1968

அன்பின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய் பலரது துயரத்தையும் நீ தாங்கி, எல்லோரையும் அரவணைத்து வாழ்ந்து காட்டினாய். உன் நினைவு என்றும் எம் இதயத்தை விட்டகலாது.

மனைவி, மக்கள்
மருமக்கள்
1432

### வாகன ஏற்றுக்கூலி கேள்வி விண்ணப்பம்

எமது சங்கத்தின் கிளைகளிலிருந்து பரந்தன், கிளிநொச்சி புகையிரத நிலையங்களுக்கும், நெற்களஞ்சியங்களுக்கும், சுன்னாகம், கோண்டாவில், பலாலி ஆகிய நெற்களஞ்சியங்களுக்கும் 140 ருத்தல் கொண்ட நெல் மூடை ஏற்றிச் செல்வதற்கு (மூடை ஒன்றிற்கு) எவ்வளவு கூலி என்பதை எமக்கு 05-02-79-க்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அறிவிக்கவும் இதற்கான விண்ணப்பப் படிவங்களை சங்கவேலை நேரத்தில் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்,
கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.

22-1-79. 1416

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# இவர்களுக்கு ரூ. 50 சம்பள உயர்வு இல்லையாம்

[யாழ்ப்பாண [

அரசாங்கம் சகல ஊழியர்களுக்கும் இம்மாதம் முதல் 50 ரூபா சம்பள உயர்வை வழங்குவதற்கு உத்தரவிட்டிருக்கும் யாழ். மாவட்டத்தில் உள்ள கமநலச் சேவை நிலைய ஊழியர்களுக்கு இச்சம்பள உயர்வு வழங்கப்படவிருக்கின்றது.

கமநலச் சேவைத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இக்கமலச்சேவை நிலைய ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்குவது பற்றி எதுவித அறிவித்தல்களும் இதுவரை கிடைக்க வில்லையாம்.

இது சம்பந்தமாக பிரஸ்தாப ஊழியர்கள் காணிவிவசாயஅமைச்சருக்கும், கமநலச் சேவை உதவி ஆணையாளருக்கும் முறை யிட்டுள்ளனர் (உடுப். நிரு.

### வீடு தேவை

சகல வசதிகளும் கொண்ட வீடொன்று யாழ். அரசாங்க அதிபருக்கு மிக அவசரமாக வாடகைக்குத் தேவைப்படுகிறது. குறைந்தது மூன்று அறைகள் உடையதாக, யாழ்ப்பாணம் செயலகத்திலிருந்து ஒரு மைலுக்குள் இருப்பது விரும்பத்தக்கது இத்தகைய வீடு உடையவர்கள் உடனடியாக அரசாங்க அதிபர், பரிபாலனக்கிளை, செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல; 520. 1430

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றம்

யாழ்ப்பாணம் கந்தர் மடம் என்னுமிடத்தைச் சேர்ந்தசின்னத்துரை நடராசா என்பவரின் மரண சாதனமில்லா மரணச் சொத்தினது விடயத்தில் மரணமெய்தியவர் நடராசா சிறிஸ்கந்தராசா, 110, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரி/3394

எதிராக

1. நடராசா மகாலட்சுமி
2. நடராசா சோமஸ்கந்தராசா இருவரும் 110, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

எதிர்வ ள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலேபெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரும்1978-ம்ஆண்டுகார்த்திகை மாதம்10-ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னரே தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக தாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1978-ம் ஆண்டு ஆடி மாதம் 10-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

காரணம் காட்டும் திகதி 26-1-1979க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக்கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்
1406 பதிவாளர்.

### விசேட சமய வகுப்பு

[உடுப்பிட்டி]

க. பொ. த. உயர்தர வகுப்புப் படிக்கும் கத்தோலிக்க மாணவர்களின் நலன் கருதி யாழ் மறைக் கல்வி நிலையம் விசேட கத்தோலிக்க சமய பாடவகுப்பொன்றை ஆரம்பித்துள்ளது

வாரந்தோறும் புதன், வியாழன் நாட்களில் மட்டும் நடாத்தப்படும் இவ்வகுப்பில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள க பொ த உயர்தர ரோ க சமய பாடப் பரீட்சை எடுக்கும் மாணவர்களே அனுமதிக்கப்படுகின்றார்கள்.

இவ்வகுப்புக்கானஒழுங்குகளை யாழ் மறைக் கல்வி இயக்குநர் கவனித்துவருகின்றார்.

]இ[

### 'நாம்செய்யும் கைம்மாறு'

[யாழ்ப்பாணம்]

"ஈழத்துக்கலையுலகில் கடந்த 10 ஆண்டுகளாக ஈடுபாடுள்ளவரான ஸ்ரீசங்கர் இந்திய தயாரிப்பான 'ராஜராஜ சோழன்' இலங்கை-இந்திய கூட்டுத்தயாரிப்பான 'பைலட் பிரேம்நாத்' போன்ற திரைப் படங்களில் நடித்ததன் மூலம் இரு நாடுகளுக்குமிடையே கலைப்பாலமாக விளங்கினார் ஈழத்துத் தமிழ்த் திரைப்பட உலகம் தலைநிமிர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் ஸ்ரீ சங்கரின் இழப்பு ஈழத் தமிழ்த் திரைப்படவுலக வளர்ச்சிக்கு ஈடுசெய்யமுடியாத ஒரு நஷ்டமாகும். அவர் தமிழ்த் திரையுலகிற்கு ஆற்றிய சேவையை ஈழத் தமிழ்பபட நடிகர்களாகிய நாம் தொடர்ந்து செய்வதன் மூலம் அவரின் கனவை நனவாக்குவதே அவருக்கு, நாம் செய்யக்கூடிய கைம்மாறு"

### இடமாற்றம்

[புலோலி]

யாழ். பல்தொழில் நுட்ப நிறுவன சிரேஷ்ட போதனாசிரியர் திரு ஆர். இலங்காதுரை, சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரிக்கு உபஅதிபராக பதவிஉயர்வுபெற்று இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

போதனாசிரியர் திரு. வி. பாலசுப்பிரமணியமும் சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரிக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். (உ)

0 0 0

[சுழிபுரம்]

வலிகாமம் மேற்குப் பிரிவு உதவிஅரசாங்க அதிபர் அலுவலகத்தில் விளையாட்டு அதிகாரியாக கடமையாற்றிய திரு இ சுப்பிரமணியம் செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு இம்மாதம்முதல் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். சென்ற எட்டு வருடங்களாக இவர் இங்கு கடமையாற்றினார். (உ)

0 0 0

சுழிபுரம் தபால் அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ். துரையப்பா ஹட்டன் தபால் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு சங்கானையில் கடமையாற்றிய திரு. ந. வீரசிங்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (உ(

### 75 ரூபா அபராதம்

[புலோலி]

வான் ஒன்றில் ஏற்றக்கூடிய பிரயாணிகளின் எண்ணிக்கைக்கு கூடிய பிரயாணிகளை ஏற்றிச் சென்ற வான் உரிமையாளருக்கு பருத்தித்துறை நீதவான் 75 ரூபா அபராதம் விதித்தார்.

பருத்தித்துறைப் பொலீசாரினால் தொடரப்பட்ட இவ்வழக்கு பருத்தித்துறை நீதவான் 75 ரூபா அபராதம் விதித்தார்.

பருத்தித்துறைப் பொலிசாரினால் தொடரப்பட்ட இவ்வழக்கு பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோதே கூடிய பிரயாணிகளை ஏற்றிச் சென்ற இவ்வான் உரிமையாளருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. [ஈ[

இவ்வாறு திரைபபட நடிகர் திரு. சிவாஸ்கர் பத்திரிகைகளுக்கு விடுத்த அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். [அ[


### வளர்ந்தோர் கல்வி ஒழுங்குபடுத்துபவர்

பாடசாலை கல்வி முறையினும் மாறுபட்ட புதிய வளர்ந்தோர் கல்வியினை ஒழுங்குபடுத்துவதற்காகவும்,ஆசிரியரோ சான்றிதழ்களோ இல்லாத கல்விக் குருவாக இயங்கும் சூழற் கல்வி.

முழுநேரவேலை, சம்பளம் திறமைக்கேற்றபடி.

கல்வித்தகைமை: ஆங்கிலம் பேசக்கூடியவராகவும் தன்னிச்சையாக இயங்கக்கூடியவராகவும் இருத்தல்வேண்டும்,

28-1-79ல் அன்று காலை 9-12 மணிக்கு

நேரில் வரவும்: P. A. Andersson
Keerimalai Road, Pandaterripu
1402

### இலங்கையில் முதல் தடவையாக TELEVISION ரெலிவிசன்

THEORY & PRACTICAL DIPLOMA CLASSES

- வயதுக்கட்டுப்பாடு கிடையாது. 8-ம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் போதுமானது.
- நான்குமாதப் பயிற்சி நெறியில் சித்தியடையின் டிப்ளோமா பட்டம் வழங்கப்படும்.
- தமிழ் - ஆங்கிலம் இரு மொழிகளிலும் விரிவுரைகள்.
- இலங்கைக்கு வெகுவிரைவில் வரவிருக்கும் ரெலிவிசன் நிறுவனத்திற்கு நீங்கள் பயிற்சி பெற்றிருப்பின் மிகக்கூடிய வேதனத்தில் சேரலாம். வெளிநாடுகளிலும்வேலைவாய்ப்பு பெறலாம்.
  ரெலிவிசன் இயக்க முறையும் ரெலிவிசனில் நிகழ்ச்சிகளைப்பார்ப்பதும் ஒரேஇடம்- இலங்கையில்.
- முழுக்கட்டணம் 360/- ஒரே முறையில் செலுத்தப்படல் வேண்டும்.
- பயிற்சி 9-2-1979-ல் ஆரம்பமாகின்றது.

வெளிவாரி பட்டப் படிப்புகள் நிறுவனம்,
148/1, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7715 1428

ஈழநாடு
The Eelanaadu

## ராஜ்மோகன் சமரச முயற்சி

இலங்கையில் தமிழர் பிரச்னைக்கு ஒரு சுமுகமான தீர்வு காணப்படவேண்டுமென்பது நாட்டின் அமைதியையும் முன்னேற்றத்தையும் விரும்பும் அனைவரினதும் பேரவாவாகும்.

தமிழர் பிரச்னை என ஒன்று இல்லை. அது எப்போதோ தீர்ந்துபோன விஷயம் என்று ஒரு காலத்தில் கூறியவர்கள் கூடப் பின்னர் தமிழ் மக்களுக்குப் பிரச்னைகள் இருக்கின்றன; அவற்றுக்கு நிரந்தரமான, சுமுகமான தீர்வு காணப்படவேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து தெளிந்து ஒப்புக்கொண்டனர்

தமிழர் பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டுமென்பதில் இன்று கருத்து வேறுபாடு இல்லை. ஆனல் எப்படித் தீர்வுகாண்பதென்பதில்தான் கருத்து வேறுபாடு இருக்கின்றது.

1977-ம் ஆண்டில் பொதுத் தேர்தல் வருவதற்கு முன்பாக அப்போது பிரதமராக இருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமா பண்டார நாயக்கா தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகளையும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதிநிதிகளையும் அழைத்துத் தமிழர் பிரச்னைகள் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தினர். இந்தக் கலந்தாலோசனை பற்றிய விபரம் வெளிவரவேயில்லை.

பொதுத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர் பிரச்னை சம்பந்தமாக சர்வகட்சி மாநாடு கூட்டி ஒரு தீர்வுகாண முயற்சிப்பதாகத் தெரிவித்திருந்தது.

புதிய அரசியல் அமைப்பில் தமிழ் மக்களுக்குச் சில உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த உரிமைகளை முன்னர் இவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவோடு அரசியலமைப்பில் அரசாங்கம் வழங்கியிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களது நிலைமையை ஆட்சிமன்றத்தினுள்ளே மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறது.

தமிழ் மக்களின் பிரச்னைகளுக்குச் சுமுகமான நிரந்தரமான தீர்வு காணப்படவேண்டுமென்பதில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மிகுந்த ஆர்வம் இருக்கிறது.

பேச்சு வார்த்தைகள் மூலம் தமிழர் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்குக் கூட்டணி இதுவரை எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்காமல போனதும் தொடர்ந்தும் தமிழ் மக்களைப்பாதிக்கும் நடவடிக்கைகளே எடுக்கப்பட்டதாலும் தான் தமிழர்விடுதலைக் கூட்டணி தனிநாட்டுக் கோரிக்கையை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதென்பது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

காந்திய வழியைப் பின்பற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி, பேச்சு வார்த்தைகளுக்கு எப்போதும் தயாராக இருக்கிறது.

ஆனல் எந்த அடிப்படையில் பேச்சு வார்த்தை நடத்துவது?

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள திரு. ராஜ்மோகன்காந்தி அரசாங்கத் தலைவர்களையும்- கூட்டணித் தலைவர்களையும் தனித்தனி சந்தித்துப்பேசி இருசாப்பினரும் சந்தித்துப் பேசக்கூடிய ஓர் அடிப்படையை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த முயற்சிவெற்றியளிக்கவேண்டுமென்பது அமைதியை விரும்பும் அனைவரினதும் பிரார்த்தனையாகும்.

இலங்கையின் கடந்தகால அரசியல் வரலாற்றைத் தெரிந்தவர்கள் ஆளும்கட்சியுடன் மட்டும் பேச்சு வார்க்கை நடத்துவதால் பயனில்லை யென்பதை உணர்வார்கள்

எனவே திரு. ராஜ்மோகன் காந்தி இதர அரசியல் கட்சித் தலைவர்களையும் இது சம்பந்தமாகத் தனித்தனியாகச் சந்தித்துப் பேசினல் அவரது முயற்சி முழுமை பெறலாமென்று எதிர்பார்க்கலாம்.

## இன்றைய இராசிப்பலன்

தை மாதம் 12-ந் திகதி வியாழக்கிழமை (25-1-79)

**மேடம்:-** எதிலும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும். பகைமூட்டம் தோன்றும், எவரிடத்திலும் அதிக பேச்சை வளர்க்கவேண்டாம்.

**இடபம்:-** வாழ்க்கை இன்று தேனை இனிக்கும், சகல துறைகளிலும் நல்ல மாறுதல்கள் ஏற்படும். பெற்றோர் உதவிக்குமிடமுண்டு.

**மிதுனம்:** அதிக அலைச்சல் உங்களுக்கு எரிச்சலைத் தரலாம் தொழில் துறையில் வருமானம் மட்டமாகவே இருக்கும். கடன்படவும் நேரிடும். சுமாரான தினம்.

**கடகம்:-** முதியவர் ஒருவர் உமக்கு வழிகாட்டியாக இருப்பார்; ஆலய வழிபாட்டில் அதிக ஆர்வம் செலுத்துவீர்கள். பரோபகாரச் சிந்தை மேலிடும்.

**சிங்கம்:-** சொந்தமாக தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும். சிலருக்கு திடீர் லாபங்களுக்கும் இடமேற்படும். சிலர் மாற்றங்களுக்கான விடயத்தில் கவனம் செலுத்துவர்.

**கன்னி:-** செய்தொழிலில் விருத்தியுமுண்டு. காதல் கணை தாக்கும் சிலருக்கு வெளியூர்ப் பயணமும் உண்டு. பெரியோர் ஆதரவும் உண்டு.

**துலாம்:-** எதிர்பாராத விதமாகபொருள்விரயமாகும். கொடுக்கல் வாங்கல் மூலம் பிணக்குகள் தோன்றக்கூடும். வீணான சிந்தனைகளுக்கிடமளியாது பொறுமையுணர்ச்சியுடன் இருக்கவும்.

**விருச்சிகம்:-** உள்வீட்டிலேயே பூசல்கள் தோன்றக்கூடும். எதிலும் விரக்தி மனப்பான்மை தோன்றக் கூடும். உடல் நலமும் சிறிது பாதிக்கப்படும். சுகாதாரம் வேண்டும்.

**தனுசு:-** கனிவான நினைவுகள் தலைதூக்கும். தனிச் சிறப்புக்கும் இடமேற்படும். அதிர்ஷ்டலாபங்களும் உண்டு.

**மகரம்:-** எதிர்பார்த்த வரவில் தடை ஏற்படும். சகோதர வழியில் சஞ்சலத்திற்கிடமுண்டு. உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்தி நடக்கவும்.

**கும்பம்:-** வாகனம் செலுத்துவோர் சிறப்படைவர். மாதுரு வழியால் வரவுஉண்டு. பூமி விவகாரத்தில் நல்ல முடிவு ஏற்படும்.

**மீனம்:-** மக்களால் மகிழ்ச்சி, புதுமையில் நாட்டம் உள்ளம் உவகையால் துள்ளும். அறவழியில் நாட்டத்திடமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# மக்கள் கருத்து

## யாழ். நகரைச் சுத்தமாக வைத்திருக்க.....

இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமான யாழ். நகரின் சீர்திருத்தம் பற்றி படிப்படியாக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எமது ஆலோசனைகளை கேட்கும் மாநகரசபை விசேட ஆணையாளருக்கு மிக்க நன்றியையும் அவரது முயற்சிகள் வெற்றிப்பெற என் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் தாமாகவே சிந்தித்துச் செயல்படும் பட்சத்தில் நிச்சயமாக யாழ். நகரம் மிகப்பொலிவுடன் விளங்கும். பல வீதிகளின் நிலைமைகளைச் சீர்தூக்கிப்பார்க்கும் பொழுது அவ்வீதிகளில் வசிக்கும் மக்களின் பொறுப்பின்மை விளங்கும் சில வீதிகளிலே கள்ளுத் தவறணையும் சாராயத் தவறணையும் அசுத்தமும் அப்பாதையால் மக்கள் நடமாடக்கூடஇயலாத நிலை யாழ். நகரின் மன்மதலீலைகளுக்கும் சண்டியர்களுக்கும் கொண்டாட்டம்.

யாழ்.மக்களின் அகராதியில் வீதிகள் என்ருல் குட்பைகளை கொட்டும் இடம் என்றே அர்த்தம் கொட்டுவது தான் கொட்டட்டும் கொட்டிய குப்பையை எரித்தாவது விடக்கூடாதா?

கதைக்கக் கூடாது ஒரு நெருப்புக்குச்சி வீணுகிவிடுமே இப்படி வீணுக்கினுல பின்னர் சீதனம் கொடுப்பது எப்படி?

வீட்டை மட்டும் அலங்கரித்தால் போததாது வாழும் சுற்றுடலையும் சுத்தமெனும் போர்வையால் அலங்கரிக்க வேண்டும் ஒவ்வொருவரும் தன்வீட்டுக்கு முன்ருல் உள்ள தங்கள் எல்லைகளை ஒழுங்காக வைத்தாலே யாழ். நகரம் பழிச்செனவிளங்கும் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பகுதிகளை சுத்தமாக வைத்திருந்தால் யாழ். மாநகர குப்பை லொறிகள் வரவும் தேவையில்லை. ஏற்றிக்கொண்டு போகும் குப்பைகளை போகும் வீதிகளிலெல்லாம் வாரியிறைக்கவும் தேவையில்லை.

ச.விக்டர் செல்வரத்தினம்
பொதுநூல்நிலையம்
கொழும்பு-7

## 'இராமநாதன் பல்கலைக் கழகம்' என மாற்றுக

அண்மையில் பத்திரிகைகளில் வெளியான செய்திகளின்படி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஒரு வளாகமாகச் செயல்பட்டுவந்த யாழ்ப்பாண வளாகம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் தனித்தியங்கும் சர்வகலாசாலையாக மாற்றப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைகின்ருேம் வரவேற்கின்ருேம். இப்பல்கலைக்கழகம் காலஞ்சென்ற மூதுபெரும் கல்விமானும் அரசியல்வாதியுமான சேர். பொன். இராமநாதன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கல்விக்கூடத்திலே பெரும்பாலும் இயங்கவிருக்கின்றது. யாழ். வளாகத்திற்கெனச் சுவீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணக்கல்லூரியும் தற்போது அமெரிக்க மிஷனரிமாரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தை இராமநாதன் பல்கலைக்கழகம் எனப் பெயரிட்டு அழைத்தால் மிகையாகாது. யாழ். வளாகம் ஆரம்பிக்கப்பட்டபோது அன்றைய அரசாங்கம் சேர். பொன். இராமநாதனின் சேவையையும்அரசியல்ஞானத்தையும் முன்வைத்து யாழ். வளாகத்திற்கு இராமநாதன் வளாகமெனப் பெயர் வைத்தது. ஆனல் அன்று யாழ்ப்பாணக்கல்லூரியும் சுவீகரிக்கப்பட்டதால் அக்கல்லூரியைச் சேர்ந்த மிஷனரிமாரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ். வளாகமெனப் பெயரிட்டதாக சர்வகலாசாலை ஊழல் பற்றி விசாரிப்பதற்கென ஜனதிபதியினுல் நியமிக்கப்பட்ட கமிஷன் முன் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் சாட்சியமளிக்கையில் கூறியது கவனத்திற்குரியதொன்று. ஆனல் இன்றைய நிலை முற்றிலும் மாறுபட்டது. யாழ்ப்பாணக் கல்லூரி திரும்பவும் மிஷனரிமாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே இப்பல்கலைக்கழகத்திற்கு இராமநாதன் பல்கலைக்கழகம் எனப் பெயரிடுவதற்கு எதுவித ஆட்சேபனையுமிராது. இதுவே தலைசிறந்த கல்விமான் ஒருவருக்கு நாடு செய்யும் கடமையாகும்.

வளாகங்களுக்குத் தனித்துவம் கொடுத்தபோது வித்தியோதய வளாகத்தை ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம் எனப்பெயரிட்டதுபோன்று யாழ் வளாகத்திற்கும் இராமநாதன் பல்கலைக்கழகம் எனப் பெயரிட்டு மறைந்த பெரியாரின் அன்றைய கனவை இன்று நனவாக்கும்படி உயர் கல்வி அமைச்சரை அதிதாழ்மையுடன் வேண்டுகின்ருேம்.

சி. கதிரவேலு
உருத்திரபுரம்.

## கடன்வழங்கு சபையில் தஸ்தாவேஜுகளின்றி அவதி

கடன் வழங்குசபை சகல திணைக்களங்கள் மீதும் முன்னுள அரசாங்கத்தினுல் கட்டாயத்தின்பேரில் திணிக்கப்பட்டதொன்ருகும். அரசாங்க ஊழியர்களின் கடன் வழங்குசபைகளுக்கு கழிக்கப்படும் நிதிகளுக்கு இதுவரை எந்தவிதமான கணக்குகளும் ஊழியர்களுக்குக் காட்டப்படவில்லை. இப்பணத்திற்குக் கொடுக்கப்படும் வட்டியோ வேறெந்தச் சலுகைகளோ இதுவரை எந்த ஒரு கடன் வழங்கு திணைக்களத்திலிருந்தும் பிரகடனப்படுத்தப்படவுமில்லை. பல மாவட்டங்களில் கடமையாற்றி அடிக்கடி மாற்றம்பெறும் அரசாங்க ஊழியர்கள் தமது சம்பளத்தில் கடன் வழங்கு சபைக்குக் கழிக்கப்படும் நிதியைத் தாம் இளைப்பாறும் பொழுதோ அன்றித் திடீரென மரணமாகும்பொழுதோ முற்ருகப் பெற்றுக்கொள்வதற்கு எதுவித தஸ்தாவேஜுகளும் இன்றி அல்லல்படுகின்றனர். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் பல மாவட்டங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் தமது பணத்தை முடிவில் எடுக்கக்கூடிய முறையில் தனித்தனி ஒரு பதிவேடு கொடுக்கப்படவேண்டும்.

ஆகவே இது விடயமாகச் சென்றகாலக் கடன் வழங்கு சபையைப்போலப் பாராமுகமாயிருக்காமல் இனித் தெரிவு செய்யப்படும் சபை முக்கிய கவனம் செலுத்தவேண்டும்.

இ. சிவானந்தம்,
ஆசிரியர்,
ஸ்கந்தவரோதயாக்கல்லூரி,
சுன்ஞகம்.

மந்தபுத்தியும் அவிவேகமுமுள்ள ஒரு நண்பன் இருப்பதைக் காட்டிலும் சுறுசுறுப்பான ஐந்து எதிரிகள் இருப்பதையே நான் அதிகம் விரும்புகிறேன்

—லூதர் டர்பாங்

# நாடு நடப்பு

சூருவளியினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்திக்குச்செலவிடும் பொருட்டே சிகரட்டின் விலையையும் குடிவகைகளின் விலைகளையும் அதிகரித்திருப்பதாக நிதி அமைச்சர் தெரிவித்திருக்கிருர்.

அப்படியானுல் சூருவளியினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அதிக உதவியளிக்க வேண்டுமானுல் அதிகமாகச் சிகரட் புகைக்க வேண்டும்; அதிகமாகக் குடிக்கவேண்டும் என்று ஒரு விளக்கம் கொடுத்தார் நடிகர் கே. ஏ ஜவாஹர்.

பிறகு அவரே அதற்குப் பதிலும் சொன்னர். குடித்துவிட்டு ஒழுங்கீனமாக நடந்தால் கடுந்தண்டனை விதிப்பதற்கு சட்டமும் வந்திருக்கிறதே!

ஃ ஃ ஃ

வீதிகளிலும் வேறு இடங்களிலும் தவறவிட்ட பொருட்கள் நல்லவர்களின் கைகளில் கிடைக்கும்போது அவர்கள் அவற்றை 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கிருர்கள். அப்பொருள்கள் பற்றி நாமும் பத்திரிகையில் இலவசமாக அறிவித்தல் கொடுக்கின்ருேம் பொருட்களைத் தொலைத்தவர்கள் நேரில்வந்து சரியான அடையாளம் தெரிவித்து அவற்றை மீட்டுச் செல்கின்றனர். மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

கவலைக்குரிய விஷயமான்றுமுள்ளது எனதுமூக்குக் கண்ணுடி தொலைந்து ஒரு வாரத்துக்கு மேலாகிவிட்டது. இன்னும் யாரும் கண்டெடுக்கவில்லையோ!

ஃ ஃ ஃ

நைஜீரியாவில் எனுகுவழி பேனு தோட்டம், இமேலே, மெதடிஸ்த உயர் பாடசாலையைச் சேர்ந்த ருேய்ஜேக்கப் மத்தியூஸ் என்னும் ஆசிரியர் எமக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில்தாம்நைஜீரியாவில்படிப்பிக்கும் 32 வயதான இந்தியரென்றும் முத்திரை சேகரிப்பதில் அக்கறையுள்ள பேனு நண்பர் தேவையென்றும் இதில் தமக்கு உதவிபுரியுமாறும் கேட்டிருக்கிருர்.

பேனு நண்பர்களே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துங்கள்.

ஃ ஃ ஃ

தமிழக அரசு தமிழ்எழுத்தில் சீர்திருத்தம்செய்வதற்கு உத்தேசித்துள்ளதல்லவா? இதற்குத் தமிழகத்தில் ஆதரவும் எதிர்ப்பும் கிளம்பியிருக்கிறது. இங்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க இணைச் செயலாளர் திரு. செ. பரமநாதன் இப்படிக் கருத்துத் தெரிவிக்கின்ருர்.

தமிழக அரசு செய்யவிருக்கும் தமிழ் எழுத்துக்களின் சீர்திருத்தம் ஒரு தேவையற்ற செயலாகும். இதனுல் தமிழின் பொலிவு குறைவது மாத்திரமல்ல, பழைய புதிய தமிழ் நூல்களுக்கிடையே முரண்பாடுகள் ஏற்பட இடமுண்டு எனவே உலகத்தமிழ் அறிஞர்கள் இச்செயலை வன்மையாகக் கண்டித்து தமிழக அரசுக்கு அறிக்கைவிடவேண்டும்.

-- ஊர்சுற்றி

# அணுஆயுத கட்டுப்பாட்டு உடன்பாடு உலக சமாதானத்துக்கு உதவும்

## வருடாந்த கொள்கைவிளக்க உரையில் அமெரிக்க அதிபர் கார்ட்டர் கருத்து

வாஷிங்டன், ஜன. 24 அமெரிக்காவின் அணு ஆயுத வலிமைக்கு குந்தகம் ஏற்படாது என்று கருதும் பட்சத்திலேயே அமெரிக்கா ஆயுதக்கட்டுப்பாடு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு மத்தியில் நிகழ்த்திய தமது வருடாந்த கொள்கைவிளக்க உரையிலேயே திரு. கார்ட்டர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தேசிய பந்தோபஸ்துக்கு மாருக இருந்தாலும் அந்த ஒப்பந்தத்தில் தாம் கையொப்பமிடப்போவதில்லையென்றும் திரு. கார்ட்டர் தெரிவித்துள்ளார்.

### நவீன கருவிகள் கண்காணிக்கும்

அணுஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் அந்த ஒப்பந்தத்தை சோவியத்யூனியன் கடைப்பிடித்து வருகிறதா என்பதைக் கண்காணிக்க அமெரிக்காவிடம் செய்மதிகள் போன்ற கருவிகள் உண்டு என்றும் திரு. கார்ட்டர் தெரிவித்தார். (இ)

## காங்கிரஸ் இணைப்பு: இந்திரா-சுவர்ண்சிங்சந்திப்பு

புதுடில்லி, ஜன. 24 இந்திய காங்கிரஸ் கட்சியையும் இந்திரா காங்கிரஸ் கட்சியையும் மீண்டும் இணைப்பது குறித்து காங்கிரஸ் தலைவர் திரு சுவர்ண்சிங்கும் இந்திரா காங்கிரஸ் தலைவி திருமதி இந்திராகாந்தியும் நேற்று சந்தித்து பேச்சு நடத்தினர்.

புதுடில்லியில் நடைபெற்ற இச் ந்திப்பில் எதுவித பலனும் கிட்டவில்லையென்று அறிவிக்கப்பட்டது

இரு கட்சிகளையும் இணைக்கும் முயற்சிக்கு இரு கட்சிகளுக்குள்ளும் ஆதரவும்எதிர்ப்பும் இருந்துவருகின்றது. (இ)

## நெருக்கடி கால குற்றச்சாட்டுகளை— எதிர்த்து வாதாட சந்தர்ப்பம் தருக

### இந்திராகாந்தி மனு

புதுடில்லி, ஜன. 24 ""நெருக்கடிநிலை அமுலில் இருந்தபோது இடம்பெற்றதாகக் கூறப்படும் அத்துமீறிய செயல்கள் குறித்து தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை எதிர்த்து வாதாட எனக்கும் ஒரு சந்தர்ப்பம் தருக''.



இவ்வாறு முன்னுள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மணிப்பூரில் நெருக்கடி நிலை அமுலிலிருந்தபோது இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்கள் குறித்து விசாரணை செய்துவரும் விசாரணைக் கமிஷனிடமே திருமதி காந்தி மேற்கண்டவாறு விண்ணப்பித்துள்ளார்.

திருமதி காந்தியின் மனு மீதான விசாரணை நாளை இப்பாலில் நடைபெறும் (இ)

## பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் பிளவு?

### அதிகாரப் போட்டி காரணம்

பெய்றூட், ஜன. 24 பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்குள் பிளவு தோன்றும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இயக்கத்தின் கொமாண்டோக் குழுக்களுக்குள் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டா போட்டியே இப் பிளவுக்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இப்பிரச்னையைச் சுமுகமான முறையில் தீர்த்து வைக்கும்பொருட்டு கடந்த வாரம் 8 நாள் மகாநாடு ஒன்றை இயக்கத் தலைமைப் பீடம் கூட்டியிருந்தது.

எனினும் இப் பிரச்னைக்கு எதுவித தீர்வும் காணப்படவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## கிரிக்கட் டெஸ்டில் ஜனாதிபதி

புதுடில்லி, ஜன 2. இந்திய-மேற்கிந்திய 5-வது கிரிக்கட் டெஸ்டின் இன்றைய முதல் நாள் ஆட்டத்தின் போது இந்திய ஜனாதிபதி திரு. நீலன் சஞ்சிவ ரெட்டி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் இந்திய-மேற்கிந்திய வீரர்கள் ஜனாதிபதிக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர். (இ)

## ஆஸ்பத்திரியிலிருந்த இளைஞரைக் காணவில்லை!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக 17ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் திடீரென மறைந்துவிட்டார்.

மல்லாகத்தைச் சேர்ந்த 22 வயதான இளைஞர் எஸ் சிறிதரன் இம்மாதம் 22ம் தேதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

23ம் தேதி காலை 7 மணிக்கு அவரை காணவில்லை என்று 17ம் வார்ட்டிலிருந்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணை செய்துவருகின்றனர். (ஈ)

## "ஈரான் பிரதமர் பக்தியார் ராஜிநாமா செய்யவேண்டும்"

தெஹ்ரான், ஜன. 24 ஈரான் மதத் தலைவர் அயத்தொல்லா கொமேனி நாடு திரும்பியதும் இப்போதைய பிரதமர் டாக்டர் பக்தியார் தமது பதவியை ராஜிநாமாச் செய்யவேண்டி ஏற்படும் என்று ஈரான் எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான ஜனப் பஸர்ஹான் தெரிவித்துள்ளார்.

ஜனப் பஸர்ஹான் கடந்த 34 ஆண்டுகளாக டாக்டர் பக்தியாருடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் அயத்தொல்லா கொமேனி நாடு திரும்பியதும் அமைக்க உத்தேசித்துள்ள ஈரான் இஸ்லாமிய குடியரசில் ஜனப் பஸர்ஹான் பிரதம மந்திரியாகத் தெரிவுசெய்யப்படுவார் என அவதானிகள் கருத்துத்தெரிவித்துள்ளனர். (இ)

## ஐந்து இளைஞரும் பிணையில்விடுதலை

(யாழ்ப்பாணம்)

வடபகுதி வங்கி கொள்ளைகள் தொடர்பாக வல்வெட்டித்துறையில் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்ட 5 இளைஞர்கள் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை பதில் நீதவான் திரு. கே. கே. பாலசுப்பிரமணியம் முன்னிலையில் சந்தேக நபர்களான ந. அருமைச்சந்திரன், த. பவாகந்தன், ச. லோகநாதன், க. ஜி ஜயசிங்கம், க.நடேசானந்தன் ஆகியோர் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான ஆர் சிறிசிவாயா, ஆர். இரத்தினசிங்கம், என். கிருஷ்ணராசா, கனகமனோகரன் ஆகியோர் ஆஜரானார்கள்.

பதில் நீதவான் சந்தேக நபர்களை தலா 2000 ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதித்தார். (சு)

## தனியார்துறை நடத்தும் பஸ் சேவை

(கொழும்பு)

தனியார்பஸ்சேவையைநடாத்த அனுமதிகோரி அரசுக்கு ஏராளமான விண்ணப்பங்கள் இப்பொழுது கிடைத்தபோதிலும் அரசு முதலில் 50 பேருக்குத்தான் தனியார் பஸ் சேவையை நடாத்த அனுமதியளிக்கவுள்ளது.

அனுமதிபெறும் தனியார் தமது பஸ் சேவையை இ. போ. ச. பஸ்வண்டிகள் ஓடும் பாதைகளில் நடாத்த விரும்பினால் இ. போ. ச. அறவிடும் கட்டணத்திற்கு குறைவாக அறவிடக்கூடாதென்றும் சேவையில் ஈடுபடும் பஸ்வண்டிகள் உன்னத நிலையில் இருக்க வேண்டும்என்றும் உறுதியளிக்க வேண்டுமென்றும் அரசுகோரியுள்ளது.

இச்சேவை பெப்ரவரி நடுப்பகுதியில் நடைபெறும். (ம)

## "உழைப்பின் சொத்தை கலைத்துறைக்கு செலவழித்த ஒரு தனித்துவக் கலைஞன்"

### ஸ்ரீசங்கருக்கு டீன்குமார் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

'தலைநகரில் தமிழ் நாடக மேடையில் தன்னிகரில்லாத தனித்துவமிக்க கலைஞராகத் திகழ்ந்த நடிகர் ஸ்ரீசங்கர் நடிப்பு ஒன்றையே தன் உயிர்த்துடிப்பாகக் கொண்டு இயங்கி வந்தார்.'

இவ்வாறு 'நான் உங்களில் ஒருவன்' கதாநாயகனை நடிகர் எம். ஜி. டீன்குமார் 'ஈழநாடு'க்கு நேற்று விடுத்த செய்தியில் குறுப்பிட்டுள்ளார்.

தமது செய்தியில் அவர் மேலும் கூறுவதாவது!

'நடிகர் ஸ்ரீசங்கர் ஈழத்தில் தமிழ் சினிமாத்துறை வளர வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக பத்தாண்டுகளுக்கு முன்பே 'மஞ்சள் குங்குமம்' திரைப்படத்தைத் தயாரித்தார். வானொலி, திரை, மேடை மூன்றிலும் தனது நடிப்புத் திறமையால் முத்திரை பதித்துள்ள நடிகர் ஸ்ரீசங்கர் தமிழ் சினிமா வேகமாக வளர்ந்து வரும் நாளில் காலமானது கலைத்துறைக்கு ஒரு பேரிழப்பாகும்.

'நடிகர் ஸ்ரீசங்கர் போன்ற உண்மையான கலைஞர்கள் தங்கள் உழைப்பின்மூலம் கிடைத்த சொத்துக்களை எல்லாம் கலைத்துறைக்கு செலவழித்ததன்மூலமே இன்றைய இளைய தலைமுறையினர் அந்தப்பலனை அனுபவிக்கும் வாய்ப்புக்கிட்டியுள்ளது கலைத்துறைக்காக நடிகர் ஸ்ரீசங்கர் தன் உழைப்பின்மூலம் கிடைத்த பல ஆயிரம் ரூபாய்களை இழந்தார் பின்னர் ஒரே மைந்தனை பறிகொடுத்தார். இன்று தன்னையே அர்ப்பணம் செய்துள்ளார்.

'வளர்ந்துவரும் ஈழத்து தமிழ்க் கலைஞர்கள் அந்தத் தியாகக் கலைஞனின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அதேவேளையில் நடிகர் ஸ்ரீசங்கரின் எண்ணங்களை எல்லாம் செயல் வண்ணமாக்க வேண்டும்' இவ்வாறு நடிகர் எம் ஜி டீன்குமார் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்

......

## உலக ஹிந்து மகாநாடு இன்று ஆரம்பம்

புதுடில்லி, ஜன 24 உலக ஹிந்து தர்ம மகாநாடு நாளை வியாழக்கிழமை அலகாபாத்தில் ஆரம்பமாகின்றது.



வெஸ்லி
(காளிப்பாம)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்
எடுப்பார்கைபிள்ளை

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
முத்துராமன் - விஜயா
தீர்க்க சுமங்கலி

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
COUNT DOWN TO
Doom's Day
(Color-Scope)

## அமைச்சு அங்கீகாரம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பைப் போன்று யாழ்ப்பாண நகரத்திலும், நீண்ட நேரம் நிறுத்திவைக்கப் பட்டிருக்கும் வாகனங்களுக்கு வரி வசூலிப்பதற்கு அமைச்சு நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாண நகரத்தில், குறிப்பாக ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லி வீதிகளில் நீண்ட நேரம் வாகனங்கள் நிறுத்தப் பட்டிருப்பதால், பொதுமக்களுக்கும், மற்ற வாகனச் சொந்தக்காரர்களுக்கும் பெரும் அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாக, யாழ். மாநகரசபை ஆணையாளருக்கு புகார் கிடைத்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க)

தினசரி 4 காட்சிகள் 2-வது வெற்றிவாரம்
ராணி (யாழ். நகர்) எம். ஜி. ஆர். - அஞ்சலிதேவி நடித்த
சக்கரவர்த்தித் திருமகள்
(புதிய பிரதி)

REGAL (Jaffna) NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p. m.
BROADWAY DEADLY GOLD
(Color- Spy Action Film)
குறிப்பு : அரங்குநிறைந்த காட்சிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன் காட்சிகள் ஆரம்பிக்கவேண்டியிருப்பதற்கு வருந்துகிறோம்.

மனோகரா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—மஞ்சுளா
அன்பே ஆருயிரே
(கலர் புதியபிரதி)

5-வது ஜனத்திரள் வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-30, 1-30, 4-00, 7-00, 10-00
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

பகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
உயர்ந்தவர்கள்

2-வது ஜனத்திரள் வாரம்
ராஜா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
பயணம்

SHANTHI Jaffna PHONE 7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00, 9-30
'Colonel Wolodyjowski'
(Cinemascope - Color - War Film)
COMING! "SEVEN NIGHTS IN JAPAN"

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) கடைசி வாரம்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்ரா
லலிதா

லிடோ (யாழ்.நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
ஆசை அறுபதுநாள்

# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# அறிவித்தல்

## மாதிரிச் சந்தை 2ம் கட்டத்திலுள்ள கடைகளுக்கும் அலுவலக இடவசதிக்குமான கேள்விகள்

1. யாழ்ப்பாணம் மாதிரிச்சந்தையின் இரண்டாம் கட்ட அமைப்பில் உள்ள கீழ்மாடி கடைகளையும், கூடங்களையும் மேல்மாடியிலுள்ள அலுவலக இடவசதிகளையும் குத்தகைக்கு கொடுப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 14-2-1979ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்படிவத்தை உள்ளடக்கிய காகிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் "யாழ்ப்பாணம் மாதிரிச்சந்தை 2ம் கட்ட அமைப்பிலுள்ள கடைகளுக்கும், கூடங்களுக்கும் மேல்மாடியில் அமைந்துள்ள அலுவலக இடவசதிகளுக்குமான கேள்விகள்" என குறிப்பிட்டு மாநகரசபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல்வேண்டும். அல்லது பதிவுத்தபால்மூலம் அனுப்பப்படல்வேண்டும்.

2. கீழ்மாடியிலுள்ள கடைகளின் வாடகை விபரங்களும் கேள்விப்பத்திரம் பெறுவதற்கு செலுத்தவேண்டிய ரொக்கப்பிணைப்பணமும் வருமாறு:

| கடை இலக்கங்கள் | மாதாந்த வாடகை விபரம் | ரொக்கப் பிணைப்பணம் |
|---|---|---|
| (1) ஏ 1 தொடக்கம் ஏ 6 வரையிலான 6 கடைகள் | ஆஸ்பத்திரி வீதிப்பக்கம் ரூபா 250/- | ரூ. 3,000/- |
| (2) ஏ 7, பி 1 தொடக்கம் பி 6 வரை, சி 1 தொடக்கம் சி 7 வரையான 14 கடைகள் | நவீனசந்தை கிழக்கு வீதி ரூபா 225/- | ரூ 2700/- |
| (3) பி 7, 8, 9, 11, 12, 13, ஈ 1 தொடக்கம் ஈ 10 வரை 16 கடைகள் | சந்தையின் உட்பகுதிக் கடைகள் ரூபா 175/- | ரூ. 2100/- |
| (4) சி 8 தொடக்கம் சி 11 வரையுள்ள 4 கடைகள் | சந்தையின் உட்பகுதிக் கடைகள் ரூபா 150/- | ரூ. 1800/- |
| (5) ஏ 8 தொடக்கம் ஏ 12 வரையுள்ள 5 கூடங்கள் | சந்தையின் உட்பகுதிக் கூடங்கள் ரூபா 75/- | ரூ. 900/- |

3. கடைகளின் அமைப்பு முறைகளும் விஸ்தீரண விபரங்களும் அடங்கிய வரைபடம் கேள்விப்படிவங்களுடன் விநியோகிக்கப்படும்.

4. கேள்விகள் 2ஆம் பந்தியில் குறிப்பிட்டபடி ஒவ்வொரு கடைக்கும் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய மீளளிக்கப்படக்கூடிய பிணைப்பணத்தை ரொக்கமாக செலுத்தியதன் மீதும் மீளளிக்கப்படாத படிவத்தின் பெறுமதியான ரூபா 15/-க்கான கொடுப்பனவைச் செலுத்தியதன் மீதும் இம் மாநகராட்சி மன்றத்திடமிருந்து 13-2-1979ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை பெற்றுக்கொள்ளக் கூடிய படிவத்தில் இணைப்பிரதியில் இருத்தல்வேண்டும். சித்திபெறாத கேள்விக்காரருடைய கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படும்.

5. கடை வழங்குதல், மாதாந்த வாடகைக்கு மேலாக கடையைப் பெறுவதற்காக கேட்கப்படும் கூடுதல் உரிமைப்பண அடிப்படையிலேயே அமையும். 2ஆம் பந்தியில் குறிப்பிட்டபடி 5 வகைக் கடைகளும் முறையே முதல்கூடிய 6, 14, 16, 4, 5 கேள்விகள் வரிசைக் கிரமப்படி ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி ஏற்றுக்கொள்ளப்படும் கடைக்காரர்களுக்கு அதே வரிசைக் கிரமப்படி அந்தந்த வகைக் கடைகளைத் தெரிவு செய்யும் உரிமை வழங்கப்படும்.

6. [அ] மேல்மாடியிலுள்ள அலுவலக இடவசதிகளுக்காக வாடகை வருமாறு:-

(1) வங்கி அலுவலக இடவசதிக்கென ஒதுக்கப்பட்ட இடவசதியின்படி ஒரு சதுர அடிக்கு வாடகை ரூபா 4-50.

(2) அலுவலக இடவசதிக்கென ஒதுக்கப்பட்ட இடவசதியின்படி ஒரு சதுரஅடிக்கு வாடகை ரூபா 3-50

[ஆ] அலுவலக இடவசதிக்கான கேள்விகளைச் சமர்ப்பிக்கவிரும்புவோர் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 1000/-ஐயும் மீளளிக்கப் படாத கேள்விப்பத்திரப் பெறுமதியான ரூபா 15/-ஐயும் செலுத்திய தன் பேரில் இம் மாநகராட்சி மன்றத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப் படக்கூடிய படிவத்திலேயே தங்களது கேள்விகளைச் சமர்ப்பிக்கவேண்டும்,

7. அலுவலக இடவசதி ஒதுக்கீடு, நிர்ணயிக்கப்பட்ட சதுரஅடி வாடகைக்கு மேலாக கேள்விக்காரர் என்ன தொகையை உரிமைப்பணமாக செலுத்துவார் என்பதன் அடிப்படையிலேயே அமையும். கேள்விக்காரர் உரிமைப்பணத்தின்பொருட்டு ஒவ்வொரு 100 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட பகுதிக்கும் எவ்வளவு உரிமைப் பணம் செலுத்துவார் என்ற அடிப்படையில்தான் விண்ணப்பிக்கும் முழுசதுரஅடி விஸ்தீரணத்திற்கும் கணக்கிட்டு கேள்வியைச் சமர்ப்பிக்கவேண்டும்.

8. சித்திபெற்ற கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட தினத்திலிருந்து 2 வார காலத்துக்குள் அவரால் அவரது கேள்வியில் குறிப்பிடப்பட்ட உரிமைப்பணம் முழுவதையும், 3 மாத வாடகைக்குச் சமமான தொகையை வைப்புப்பணமாகவும் செலுத்தி கடையின், கூடத்தின் அல்லது அலுவலக இடவசதியின் குத்தகைக்கு ஓர் உடன்படிக்கையில் ஒப்பமிடல்வேண்டும்.

9. கடைகளினதும், கூடங்களினதும், அலுவலக இடவசதிகளினதும் குத்தகைக் காலம் 1-3-1979 தொடக்கம் 28-2-1986 வரையான 7 வருட காலத்துக்கு வரையறுக்கப்பட்டதுமாகும்.

10. 8ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட எந்த நிபந்தனையையாவது பூர்த்தியாக்கத் தவறுபவர்களின் கேள்வி வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படும். சித்திபெற்ற கேள்விக்காரரினால் செலுத்தப்படும் உரிமைப்பணம் மீளளிக்கப்படமாட்டாததும் வாடகைக்கு எதிராக கணக்கு வைக்கப்படமாட்டாததும் சபையின் வருமானத்துக்குரியதுமாகும்.

11. யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் வசிக்கும் கேள்விக்காரர்களுக்கும் 1977ஆம் ஆண்டு ஆகஸ்ட்கலவரத்தினால் வெளியூர்களில் பாதிக்கப்பட்டு தாங்கள் வியாபாரம் செய்த இடங்களுக்குச் சென்று மீண்டும் தமது வியாபாரத்தைச் செய்யமுடியாத நிலையில் உள்ளவர்களுக்கும், இது சம்பந்தமான போதிய ஆதாரங்களைக் கேள்வியுடன் சமர்ப்பிக்கும் பட்சத்தில் சபையின் வருமானம் பாதிக்கப்படாத வகையில் முன்னுரிமை வழங்கப்படும்.

12. யாதொரு காரணமும் காட்டாது கேள்விகள் அனைத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியையோ அல்லது எதனையுமோ ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை விசேட ஆணையாளருக்கே உரியது.

13. 14-2-1979ம் திகதி புதன்கிழமை பி. ப. 2-00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர்

14. இக்கேள்விகள் சம்பந்தமான இதர விபரங்களை அலுவலக நேரங்களில் இம்மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க. சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம், 23-1-1979. 1429

கிரிக்கெட் டெஸ்ட் போட்டி

# வலுவான நிலையில் இந்திய கோஷ்டி

புதுடில்லி, ஜன 24

புதுடில்லியில் ஆரம்பமான இந்தியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்குமிடையிலான 5வது டெஸ்ட் போட்டி மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது.

'டொஸ்' குலுக்கு ஆட்டத்தை ஆரம்பித்த இந்திய கோஷ்டி வீரர்கள் காப்டன் சுனில் கவாஸ்கர் தொடக்க ஆட்டக்காரர் சவானும் மிக நிதானமாக மேற்கிந்திய கோஷ்டி வீரர்களின் வேகப் பந்து வீச்சுக்களை எதிர்த்து விளையாடினார்கள் பந்துகள் துடுப்பாட்டக்காரர்களுக்கு உடல்அளவில்கூட கஷ்டத்தை ஏற்படுத்தியபோதிலும்இந்திய விக்கட்டுகளை இலகுவில்வீழ்த்த முடியவில்லை.

சவான் 60 ஓட்டங்களை சேர்த்தபின்னர் அவுட்டானார் அதன்பின் களத்தில் பிரவேசித்த வெங்கஸ்க்கார் ஆட்ட நேரம் முடியும்போது 44 ஓட்டங்களைஎடுத்திருந்தார் கவாஸ்கார் 119 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருந்தார்.

நாளை மீண்டும் போட்டி ஆரம்பமாகும்போது இந்த இரு வீரர்களும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடுவார்கள்.

இந்திய கோஷ்டி மிகவலுவான நிலையில் இப்போது இருக்கின்றது. ஆட்டம் முடிவு பெறும்போது இந்திய கோஷ்டி ஒரு விக்கட்டை இழந்து 264 ஓட்டங்களை எடுத்திருந்தது.

கவாஸ்கர் இதுவரை டெஸ்ட் போட்டிகளில் 19 செஞ்சரிகள் போட்டுள்ளார். மேற்கிந்தியக் கோஷ்டிக்கு எதிராக அவர் 10 செஞ்சரிகள் போட்டுள்ளார், வெளிநாட்டுக் கிரிக்கட் கோஷ்டிக்கு எதிராக இந்திய வீரர் மங்கேட்கர் போட்டுள்ள செஞ்சரியை கவாஸ்க்கர் மிஞ்சியுள்ளதுடன் மேற்கிந்திய-இந்திய கோஷ்டிகளுக்கிடையில் நடந்துள்ள போட்டிகளில் கெரி சோபர்ஸ் எடுத்துள்ள 1920 ரன்களையும் மிஞ்சியுள்ளார்.

## யாருடையது?

நடராஜா சண்முகம்பிள்ளை என்பவரின் அடையாள அட்டை, யாழ். ஆஸ்பத்திரி வீதியில் திரு ஏ. யோகராசா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக் கொள்ளலாம்.

# கணவன் இன்னொரு பெண்ணுடன் தொடர்பாம்

## இளம் மனைவி தற்கொலை

[யாழ்ப்பாணம்]

திருமணமாகி நான்கு மாதமாகியும், 'தேன்நிலவுக்குக் கூடசெல்லாமல், தனிமையில் தவிக்கவிட்டு கணவன் வேலை தேடி டுபாய்க்கு சென்றதால் இளம்மனைவி மனமுடைந்து நஞ்சு அருந்தி உயிரை மாய்த்துக்கொண்டார்!

உரும்பராய் இழக்கைச் சேர்ந்த 31 வயதான சிவலோகநாதன் பத்மாவதியின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். எஸ் பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

இறந்த இளம்பெண் கணவனுக்கும், பெற்றோருக்கும் எழுதிவைத்த கடிதங்களும், மரணவிசாரணையில் சமர்ப்பிக்கப்பட்டது.

கணவனுக்கும், மற்றொரு கொழும்பு யுவதிக்கும் தொடர்பு இருப்பதை கடிதங்கள் மூலமும், நேரிலும் அறிந்து, வேதனையால் வெதும்பி இம்முடிவை தான் எடுத்துக் கொண்டதாக அப்பெண்ணின் கடிதங்கள் தெரிவித்தன.

78 செப்டம்பர் 15ம் தேதி தன்னைத்தாலிகட்டிய கணவன் தம்முடன் ஒரு நிமிடமாவது மகிழ்ச்சியாக இருக்கவில்லை என்றும் தன்னைக் கொழும்புக்கு உறவினர் வீட்டுக்கு அழைத்துச் சென்றபோது, அவ்வீட்டிலுள்ள பெண்ணுக்கும், கணவனுக்கும், நெருங்கிய உறவு இருப்பதை அறிந்து கொண்டதாகவும், அதன்பின் கணவனின் டயரியிலிருந்த கடிதமொன்று அதனை ஊர்ஜிதப்படுத்தியதாகவும் பெண்ணின் கடிதங்கள் எடுத்துரைத்தன.

நான்கு மாதங்களாக மனத்துக்குள் வேதனையால் வாடி வதங்கி, எவருக்குமே வெளிக்காட்டிக்கொள்ளாமல்வாழ்ந்த அப்பெண், வேலைதேடிக் கணவன் வெளிநாடு சென்றதால், விரக்தியடைந்து சொந்த வீட்டில் உயிரை மாய்த்துக்கொண்டார்!

சம்பவதினமன்று படுத்திருந்த மகளை தாயார் தட்டி எழுப்பியபோது வாழ்வுகசந்து விட்டதாகவும் அதனால் நஞ்சு குடித்துவிட்டதாகவும் கூறினாராம் அவரின் துணிகளுக்கிடையில் கடிதங்கள் கண்டெடுக்கப்பட்டன.

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இப்பெண் அங்குமரணமானார். விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. [கை]

## அந்தியேட்டி அழைப்பு

### மரண நன்றி நவிலல்

ஐயம்பிள்ளை தம்பையா (மறைவு 27-12-78)

புங்குடுதீவு 7-ம் வட்டாரத்தைச் சேர்ந்த ஐயம்பிள்ளை தம்பையா அவர்களின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது இல்லத்தில் 26-1-79 வெள்ளிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், வீட்டுக் கிருத்தியத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

'தேவி பவனம்', ஊரதீவு, புங்குடுதீவு. 1433

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவ. மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு தைமாதம் 25-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the Geneial PostOffice

The Eelanaadu Post Bex No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News paper in Sri Lanka.

## தனியாக ஒரு அதிகாரி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண நகரத்தில் புதிதாக நிறுவப்படவிருக்கும் கட்டிட விண்ணப்பங்களை பரிசீலனை செய்வதற்கு தனி அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் சுகாதாரப் பகுதியினரே கட்டிட இலாகா விண்ணப்பங்களை பரிசீலனை செய்துவந்தனர். [ஃ]

## எவரும் கைதாகவில்லை

[புலோலி]

புலோலி மூதாட்டி பார்வதிப்பிள்ளை மரணம் சம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

பருத்தித்துறை பதில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எம். ஜி. சேரசிங்கா, சார்ஜன்ட் திரு. எஸ். மாணிக்கராசா ஆகியோர் விசாரணை செய்துவருகின்றனர்.

## கலைஞர்கள் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

மறைந்த கலைஞர் ஸ்ரீசங்கரின் இறுதிக்கிரியைகள் நேற்று மாலை பருத்தித்துறையில் நடைபெற்றன. இறுதி ஊர்வலத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

இறுதி அஞ்சலியில், வடபகுதியின் பல இடங்களையும், கொழும்பையும்சேர்ந்த ஏராளமான கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

திரு. அந்தனி ஜீவா தமது அஞ்சலிச் செய்தியில், ''கலையுலகில் கடந்த கால் நூற்றாண்டுகளாக கலைப்பணியாற்றிய நடிகர் ஸ்ரீசங்கரின் மறைவு கலையுலகிற்கு பேரிழப்பாகும். அவரின் மறைவுக்கு எமது இதயஅஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்றார்.

திரைப்பட வசனகர்த்தாவும், நடிகருமான திரு. கலைச்செல்வன் தமது அனுதாபச் செய்தியில், ''வரலாறு நீ படைப்பாய் என்றிருந்தேன், வரலாறே நீ ஆனால், என்செய்வேன் நண்பா? உன் ஆட்டம் முடிந்தது. என் நெஞ்சில் உன் நினைவாட்டம்தொடர்கிறது'' எனக் குறிப்பிட்டார்.

ஜவாஹர் தமது அஞ்சலியில், ''என்னுடைய கலைத்துறை வாழ்க்கையில் மிகநெருக்கமான நண்பராக இருந்த ஸ்ரீசங்கர் திறமைசாலிகளை இனங்கண்டு அவர்களுடன் ஒன்றிணைந்து நடிப்பதில் பெருமைப்படுபவர்'' என்று தெரிவித்தார். [கம்பளை நிரு]

## இன்றைய மோதல்கள்

[யாழ்ப்பாணம்]

'ஈழநாடு' வெற்றிக்கிண்ணத்திற்காக காங்கேசன்துறை யங் ஸ்ரேயல் விளையாட்டுக் கழகத்தின் 10வது ஆண்டுவிழாவை ஒட்டி காங்கேசன்துறை பட்டின சபை மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மோதும் கோஷ்டிகள் விபரம் வருமாறு:

முதலாவது ஆட்டத்தில் (மாலை 6-30) குருநகர் சென் ஜேம்ஸ் கல்லூரி மகாஜனக் கல்லூரிக்கும் வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலைக்கும் இடையே நேற்று நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற கோஷ்டியுடன் மோதுகின்றது.

2-வது ஆட்டத்தில் (இரவு 7-30) மயிலிட்டி அண்ணா விளையாட்டுக் கழகம் காங்கேசன் யங் ஸ்ரேயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மோதும்.

மூன்றாவது போட்டியில் (இரவு 8-20) நாவலப்பிட்டி தெரிவுக்கோஷ்டி குருநகர் சன சமூக நிலையத்தை எதிர்த்து ஆடும். [இ]

யாழ்ப்பாணம்

# நவீனமார்க்கட் கடைகள் 'டெண்டர்'கோரப்பட்டுள்ளன

[யாழ்ப்பாணம்]

சுமார் 15 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ள யாழ். நவீனமார்க்கட் 2-ம் கட்டப்பகுதி கடைகளுக்கு 'டெண்டர்' கோரப்பட்டுள்ளது.

நவீன மார்க்கட்டின் கீழ்ப் பகுதியில் 46 கடைகள் உள்ளன. இவற்றில் ஒரு அறை காரியாலயத்துக்குப் பயன்படுத்தப்படவிருக்கிறது.

மேல்மாடியில் இரண்டு பெரிய மண்டபங்களும் ஒரு சிறிய மண்டபமும் உள்ளன. இவை வங்கி அலுவலகங்களுக்கும் இலாகா அலுவலகங்களுக்கும் குத்தகைக்குக் கொடுக்கப்படவிருக்கிறது.

மார்ச் மாதம் 1-ந் திகதி முதல் நவீனமார்க்கட் கடைகளும் மண்டபங்களும் குத்தகைக்கு அமுலாகவிருக்கிறது.

பெப்ரவரி மாத இறுதியில் நவீனமார்க்கட் வேலைகள் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மார்ச் மாத இறுதிக்குள் நவீன மார்க்கட்டைத் திறந்து வைக்க பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா யாழ்ப்பாணத்திற்கு வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நவீனமார்க்கட் கடைகளை டெண்டர்களுக்குக் கொடுப்பதன்மூலம் சுமார் பத்து லட்சம் ரூபாவிற்கு மேல் சபைக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

நவீன மார்க்கட்டின் 1-ம் கட்ட உள்பகுதியில் கடந்த வருடம் இரு கடைகள் தலா 42 000 ரூபாவிற்கு ரெண்டருக்கு வழங்கப்பட்டிருந்தது. [ஃ]

கம். கட்சி வடகிளையின்

# மகஜர் குறித்து ஜனாதிபதி பதில்

(நெல்லியடி)

இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியின் வடபிரதேச மத்தியசெயற்குழுவால் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட மகஜருக்கு ஜனாதிபதி பதில் அனுப்பிவைத்துள்ளார்.

மகஜர் கிடைத்துள்ளதாகவும், அம்மகஜரிலுள்ள விடயங்கள் சம்பந்தமாக தாம் கவனம் எடுப்பதாகவும் ஜனாதிபதி பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பதில் சம்பந்தமாக வடபிராந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு மீண்டும் கூடி சில தீர்மானங்களை நிறைவேற்றியிருப்பதாக கட்சியின் வடபிரதே செயலாளர் திரு. பொன் குமாரசாமி தெரிவித்தார்

அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் பரந்த இயக்கமொன்றினை ஆரம்பித்தல், கூட்டுமுன்னணி, எதிர்க்கட்சித்தலைவர் ஏனைய பாராளுமன்ற அங்கத்தவர்களையும் அழைத்து பேச்சுவார்த்தைகளை நடத்துதல், ஆரம்பிக்கப்படவுள்ள இயக்கம் சம்பந்தமாக தொகுதிகள் தோறும் கருத்தரங்குகளையும் பொதுக்கூட்டங்களையும் நடத்துதல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## சரண்சிங்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய உள்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனதா கட்சியிலிருந்து சரண்சிங்குடன் வெளியேறிய ஜனதா கட்சிப் பொதுச்செயலாளரும் மீண்டும் மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

திரு. ரவிராய் சுகாதார குடும்பநல அமைச்சராகப் பதவி ஏற்றுக்கொண்டார்

முன்னர் சுகாதார குடும்பநல அமைச்சராகப் பதவி வகித்த திரு. ராஜ்நாராயணனும் திரு. சரண்சிங்குடன் மந்திரிசபையிலிருந்து வெளியேற்றப்பட்டது தெரிந்ததே.

### ஜெகஜீவனும் துணைப்பிரதமர்

பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராமும் தாம்வகிக்கும்பதவியுடன் துணைப் பிரதமராகவும் பதவிஏற்றுள்ளார்.

### பதவிப் பிரமாணம்

இன்று ராஷ்டிரபதி பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஜனாதிபதி திரு நீலன் சஞ்சீவ ரெட்டி திரு. சரண்சிங், திரு ரவிராய், திரு ஜெகஜீவன்ராம் ஆகியோருக்கு பதவிப் பிரமாணமும் இரகசியகாப்புப் பிரமாணமும் செய்துவைத்தார். இவ் வைபவத்தில் திரு. மொரார்ஜிதேசாய், திரு. சந்திரசேகர், அமைச்சர்கள், எம். பிக்களும் கலந்து கொண்டனர். (இ)

## இடமாற்றம்......

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கிறார்கள். இந்நிலைமாறவேண்டும்.

பூநகரி மகாவித்தியாலயத்தில் சுமார் 50,000 ரூபாசெலவில் புதிதாக அமைக்கப்பட்ட மண்டபத்தைத் திறந்து வைத்துப்பேசிய வடமாநில கல்வி அதிபதி திரு. ரி. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினார்.

அதிபர் திரு. தா. தணிகாசலம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. மாணிக்கவாசகர் பேசும் கூறியதாவது: ஆசிரியத் தொழில் என்பது புனிதமானதும், தெய்வீகமானதுமாகும். அத்தொழிலைச் செய்பவர்கள் வசதிகள் நிறைந்த இடத்தில் செய்வது மட்டும் சேவையாகாது. பூநகரி, கிளிநொச்சி போன்ற வசதிகள் குறைந்த பிரதேசத்திலும் சேவைசெய்ய முன்வரவேண்டும். அப்படிசஷ்டப் பிரதேசத்தில் சேவைசெய்பவர்களுக்கு பதவி உயர்வுகளில் கூடமுன்னுரிமைவழங்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளார்.

உங்கள் அதிபர் வசதிகள் நிறைந்த யாழ். இந்துக்கல்லூரியிலிருந்து இங்கு வந்து அதிபராகப் பதவியேற்ற பின் பலவகைகளிலும் பாடசாலையின் நிலையை உயர்த்தியுள்ளதோடு ஒரு லட்சம் ரூபா செலவில் இரண்டு மண்டபங்களை திறவிசேவை செய்வதை என்னால் பாராட்டாமல் இருக்கமுடியாது.

## சிறுதீவில்....

(1-ம் பக்கத்தொடர்ச்சி]

யேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்படும்

சிறுதீவில் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கவேண்டும் என மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டத்தில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதேசமயம் யாழ்ப்பாணம் மாநகரசபை சிறுதீவை உல்லாசபுரியாக்கவேண்டும் என்றும் தீர்மானித்திருந்தது (க)